முறையில் இருக்கிறது. பர்சேசிஸ் ரைட் என்று சொன்னால், குத்தகைதாரர்கள் விற்கவேண்டுமென்று இருக்கிறதே தவிர மற்றவர்களுக்கு விற்கக்கூடாது என்பது சாராம்சம்.

மு.ப. 10–00 **மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** ஆக்குபன்ட்ஸ் ரைட்டுக்கும், டெனன்ட்ஸ் ரைட்டுக்கும் உள்ள வித்தியாசத்தைத் தெரிந்துதான் வைத்து இருக்கிறோம். குத்தகைதாரர்களுக்கு நிலத்தை வாங்கும் உரிமையைக் கொடுத்திருக்கிறோம். அதற்குத் தடை இல்லை. அதோடு குத்தகைதாரர்களைக் காலி செய்யும் உரிமை யாருக்கும் கிடையாது. நண்பர் பழனிசாமி அவர்கள் இதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

திரு. என். கே. பழனிசாமி: நிலப் பிரபுக்கள் விலைக்கு விற்க முடியாது. . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் நண்பர் பழனிசாமி அவர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புவது, கொஞ்சம் பொறுத் திருங்கள், அதற்கு எல்லாம் சட்டம் வர இருக்கிறது. அந்தச் சட்டத்தில் எல்லாப் பாதுகாப்பும் செய்யப்பட்டிருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி: மேட்டூர் அலுமினியத் தொழிற் சாலையை சர்க்கார் எடுக்கப் போகிறார்கள். அதுபற்றி மத்திய அரசிடம் அனுமதி கேட்டிருக்கிறார்கள். அனுமதி வந்தபிறகு அந்த நிறுவனத்தை எடுத்துக்கொள்வதாகச் சொல்லியிருக் கிறார்கள். சமீபத்தில் மத்திய அரசாங்கம் நிலக்கரி சுரங்கங்களை எல்லாம் திடீரென்று ஒரு அவசரச் சட்டத்தின் மூலம் எடுத்துக் கொண்டார்கள். அப்படி இருந்தும் அவசரச் சட்டம் வருவதாகத் தெரிந்து, நிலக்கரி சுரங்க சொந்தக்காரர்கள் பாங்கில் இருந்த பணத்தை எல்லாம் எடுத்துவிட்டார்கள். தொழிலாளர்களுக்குச் சரியாகச் சம்பளம் கொடுக்கவில்லை. அதைப் பார்க்கும்போது, தமிழ்நாடு அரசாங்கத்தின் இந்தத் திட்டத்தினால் பயன் ஏற்படாது என்றுதான் தெரிகிறது. மத்திய அரசாங்கத்தின் அனுமதி வருவதற்குள் அந்த அலுமினியத் தொழிற்சாலையில் மிஷினரி கூட இருக்காது. 1954 ஆம் ஆண்டில் இன்டஸ்டிரியல் பாலிசி ரெசலூஷன் ஒன்று போட்டார்கள். அதுமாதிரியான ஒரு ரெசலூஷனைப் போட்டு, ஒரு அவசரச் சட்டத்தைப் பிறப்பித்து,